
## இயல் 7.1 - எண்ணியல்

பயிற்சி எண் :: 7.1.3.1.A

எண்ணியல் - தசம எண்கள் - அறிமுகம்

## எண்ணியல் - தசம எண்கள் - அறிமுகம்

1) நாம் அன்றாடம் பயன்படுத்தும் அளவுகோலைக் கருதுக.





- நாம் பொதுவாக அளவுகளை செ.மீ -ல் குறிப்போம். இங்கு 5 செ.மீ மற்றும் 6 செ.மீ -க்கு இடைப்பட்ட பகுதியை உற்றுநோக்குக.
- ஒவ்வொரு சென்டிமீட்டரும் 10 சம பாகங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. அது மில்லிமீட்டர் ஆகும்.
- 1 மி.மீ = $\frac{1}{10}$ செ.மீ அல்லது 1 செ.மீ -ல் பத்தில் ஒரு பகுதி 1 மி.மீ எனக்கூறலாம். அதாவது, $\frac{1}{10}$ செ.மீ = 0.1 செ.மீ எனக் குறிப்பிட இயலும்.
- இதேபோல்,

  a) $\frac{4}{10}$ செ.மீ = 0.4 செ.மீ

  b) $\frac{22}{10}$ செ.மீ = 2.2 செ.மீ


  c) $\frac{54}{10}$ செ.மீ = 5.4 செ.மீ எனக் குறிப்பிட இயலும்.
- 5 செ.மீ மற்றும் 6 செ.மீ -க்கு இடையில் 5.1 செ.மீ, 5.2 செ.மீ, ..., 5.9 செ.மீ என்ற அளவுகள் குறிப்பிடப்பட்டிருக்கும்.




2) ஒரு பல்பொருள் அங்காடியின் விலைப்பட்டியலைக் கருதுக.

| ABC பல்பொருள் அங்காடி | | | |
|---|---|---|---|
| பட்டியல் எண் :: 5/6 | | நாள் :: 06-05-2022 | |
| **எண்** | **பொருட்கள்** | **அளவு** | **விலை (₹)** |
| 1 | அரிசி | 5.500 கி.கி | 211.25 |
| 2 | சர்க்கரை | 2.500 கி.கி | 73.40 |
| 3 | நல்லெண்ணெய் | 3.500 லி | 334.50 |
| 4 | பால் | 1.250 லி | 35.75 |
| 5 | சணல் கயிறு | 4.500 மீ | 45.50 |
| **மொத்தம்** | | | 700.40 |

- கொடுக்கப்பட்ட விலைப்பட்டியலில் உள்ள பொருட்களின் அளவு மற்றும் விலையை உற்றுநோக்குக.
- பொருட்களின் அளவு, கிலோ கிராம் மற்றும் கிராமிலும், லிட்டர் மற்றும் மில்லி லிட்டரிலும், மீட்டர் மற்றும் சென்டிமீட்டரிலும் கொடுக்கப்பட்டுள்ளது.
- அதேபோல், விலை ரூபாய் மற்றும் பைசாவிலும் குறிக்கப்பட்டுள்ளது.
- பொருட்களின் அளவுகளை தசமப் புள்ளியைப் பயன்படுத்தி எடுத்துக்காட்டாக, 3 லிட்டர் 500 மில்லி லிட்டர் என்பதை, 3.500 லிட்டர் என்று துல்லியமாகக் கூற இயலும்.





## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Friday 24th June, 2022 :: 12:12 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.